இணைப்பு 01

2022 ஆம் ஆண்டின் மின்சாரத் தொழிற்துறைக்கான பொதுக் கொள்கை வழிகாட்டுதல்களின் திருத்தங்கள்

கட்டணக் காலம்

10. ஒவ்வொரு ஆண்டும் நுகர்வோருக்கான விலைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் யூலை மாதங்களின் 01 ஆம் திகதியை ஒரு நிலையான தியதியாகக் கொண்டு, மின்சார விநியோகத்தின் செலவுகள் மற்றும் விலைகள் குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை (கட்டணக் காலம்) மீளாய்வு செய்யப்படும். உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோக செலவுகள் போன்ற செலவுகளின் கூறுகள், வருடத்திற்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படுவதோடு, அதிக பணவீக்கம் மற்றும் எண்ணெய் விலை, நாணயமாற்று விகிதம் மற்றும் மழைப்பொழிவு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களால் உற்பத்தி செலவில் ஏற்படும் மாற்றங்களினால், அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுடன், கட்டணக் காலத்தை குறைக்குமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUSCL) மற்றும் அனுமதிப்பத்திரதாரர்களிடம் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

11. ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்ட மின்சாரக் கட்டணங்கள் நடைமுறைக்கு வரும் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளை ஒவ்வொரு ஆண்டும் PUCSL உடனடியாக வெளியிடல் வேண்டும். இவ் திகதிகள் 2030 வரையிலான காலம் முழுவதும் நிலையானதாக இருக்கும். அனுமதிப்பத்திரதாரர்கள், PUCSL ஆல் வெளியிடப்பட்ட அட்டவணையில், அத்தகைய திகதிக்கு முன்னதாக, ஒப்புதலுக்காக தங்கள் செலவுகள் மற்றும் விலைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

பரிமாற்றம் மற்றும் விநியோக அனுமதிப்பத்திரதாரர்களின் மொத்த வருமானத் தேவைகள்

12. பரிமாற்றல் அனுமதிப்பத்திரதாரர், கட்டணம் செலுத்தவேண்டிய காலத்தின் இறுதி நாளாகக் கொண்ட 30 நாட்களுக்குள், முன்னைய கட்டணக் காலத்தில் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட உண்மைச் செலவினம் மற்றும் கட்டணம் செலுத்தவேண்டிய காலத்தின் ஆரம்பத்தில் 30 நாட்களுக்கு முன்னர் அடுத்துவரும் கட்டணக் காலத்திற்கான திட்டமிடப்பட்ட மின்சாரக் கொள்வனவிற்கான செலவினம் போன்றவற்றை PUCSL க்கு சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மின்சாரக் கொள்வனவுச் செலவினங்களை வெளிடுதலை PUCSL மதிபாய்வு செய்யும் மற்றும் பரிமாற்றல் அனுமதிப்பத்திரதாரிடமிருந்து 15 நாட்களுக்குள் மின்சாரக் கொள்வனவுச் செலவினங்களுக்கான திகதி பெற்கொள்ளப்பட்டதும் மின்சாரக் கொள்வனவுச் செலவினங்களை தீர்மானிப்பதற்கு பரிமாற்றல் அனுமதிப்பத்திரதாருக்கு அனுமதி கொடுக்கப்படும்.

13. பரிமாற்றம் மற்றும் விநியோகம் அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் ஒவ்வொரு ஆண்டும் PUCSL க்கு பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பை பராமரிப்பதில் ஏற்படும் செலவு மற்றும் முன்னைய ஆண்டுக்கான மேலதிக மற்றும் நிதி செலவுகள் மற்றும் அடுத்து வரும் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட செலவுகள் உட்பட ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆம் திகதிக்குள் சமர்ப்பிப்பார்கள். அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் சமர்ப்பித்த மின்சார கொள்வனவு செலவுத் தரவு மற்றும் பரிமாற்றம் மற்றும் விநியோகச் செலவுத் தரவு ஆகியவற்றின் அடிப்படையில், நாட்காட்டி ஆண்டு தொடங்கும் 2 மாதங்களுக்கு முன்னர் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரின் மொத்த வருமானத் தேவைகளையும் PUCSL தீர்மானிக்கும். எவ்வாறாயினும், தேசிய நலனைக் கவனத்திலெடுத்து, பரிமாற்றம் மற்றும் விநியோகச் செலவின் அடிப்படையில் விலை மற்றும் கட்டணத் திருத்தத்திற்கு அமைச்சரவை அமைச்சர்களால் வழங்கப்பட்ட சிறப்பு ஒப்புதலுக்கமைய, இவ் தீர்மானத்தை செயற்படுததுவதற்கு PUCSL உடனடி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

14. அனுமதிப்பத்திரதாரரின் ஒவ்வொரு பரிமாற்றல் மற்றும் விநியோகத்திற்கான அனுமதிக்கப்பட்ட மொத்த வருமானத் தேவைகளும் திருத்தப்பட்ட முறையில் தீர்மானிக்கப்படும். அத்துடன் 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒவ்வொரு கட்டணக் காலங்களும் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படுவதோடு PUCSL ஆல் இவை அமுல்படுத்தப்படும். அத்துடன், அனுமதிக்கப்பட்ட வருமானங்களை உறுதிப்படுத்துமுகமாக, செயற்திறன்வாயந்த செலவினங்களை பிரதிபலித்தல், அனுனமதிப்பத்திரதாராரின் ஒவ்வொரு பரிமாற்றல் மற்றும் விநியோகத்தை வரையறுத்தல் மற்றும் பிரதான செயற்பாட்டு சுட்டெண்களை கண்காணித்தல் மற்றும் செயற்திறன் வாயந்த செயற்பாடுகளுக்கான முன்னேற்றங்களுக்கான இலக்குகுளை சமர்ப்பித்தல் (ஏனைய பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியான மின்சாரக் கட்டணங்களின் குறிப்புகள் உள்ளடங்கலாக) மற்றும் ஒவ்வொரு வருமானத் தேவைகளுக்கம் சமர்ப்பிக்கப்பட்ட சாதனைகள் போன்றவற்றை பிரதிபலித்தல் வேண்டும்.

15. கட்டணக் காலத்திற்கு அனுமதிக்கப்படும் பரிமாற்றம் மற்றும் விநியோகச் செலவு அதிகமாக இருப்பின், இதற்கான நியாயமான காரணங்கள் முன்வைக்கப்படாத விடத்து, அத்தகைய தொகைகள் ஈடுசெய்யப்பட மாட்டாது. அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் பின்பற்ற வேண்டிய குறைந்தபட்ச திறன் நிலைகளை நிறுவும; வகையில், PUSCL ஆனது, சுயாதீன நிபுணர் அமைப்புடன் ஆய்வொன்றினை மேற்கொள்ளும். மேலும், அனுமதிப்பத்திரம் பெற்றவர் நிர்ணயிக்கப்பட்ட செயற்திறன் தரநிலைகளை பூர்த்தி செய்யாத விடத்து, மொத்த வருவாய் தேவைகள் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச செயற்திறன் மட்டத்தில் கணக்கிடப்படும்.

ஒவ்வொரு வகை நுகர்வோருக்கும் மின்சாரம் வழங்குவதற்கான செலவினம் மற்றும் செலவினங்களை –பிரதிபலக்கக் கூடிய கட்டணங்கள்

16. 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள், கொள்கை வழிகாட்டுதல்களைக் கவனத்திலெடுத்து, நுகர்வோருக்கான கட்டணங்களை நிர்ணயிப்பதற்கான வழிமுறைகளை PUCSL வெளியிடும்.

17. மின்சாரக் கொள்வனவு விலைகள், எதிர்பாக்கப்பட்ட வாடிக்கையாளரின் எணணிக்கை மற்றும் விற்பனை உட்பட அனுமதிக்கப்பட்ட மொத்த வருமானத் தேவைகளை கவனத்திலெடுத்து, வருடம் முழுவதும் மின்சாரத்தை தடையின்றி நுகர்வோருக்கு வழங்கப்படுகிறது என்ற அனுமானத்தின் அடிப்படையில், வாடிக்கையாளர்களின் ஒவ்வொரு வகை மற்றும் பிரிவினருக்கும் ஒரு விரிவான மின்சார விநியோக செலவினம் ஒவ்வொரு கட்டண காலத்திற்கும் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

18. ஸ்மார்ட் மின்மானிகளை பெற்றுக்கொள்ளும் நுகர்வோர், அவர்களது மின்மானி வெவ்வேறு நேரத் தொகுதிகளில் மின்சார நுகர்வுகளைப் பதிவுசெய்யும் திறன் கொண்டமைந்நதாகக் காணப்படும். இதனால், PUCSL ஆல் வெளியிடப்படும் முறையின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட நேரத் தொகுதிகளுக்கு மின்சார விநியோகச் செலவினங்கள் கணக்கிடப்படும்.

19. நுகர்வோருக்கான கட்டணங்கள், ஒவ்வொரு நுகர்வோர் பிரிவினருக்குமான மின்சார விநியோக செலவினங்களை பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்படும். எவ்வாறாயினும், குறைந்த வருமான வகுப்பினரை இலக்காகக் கொண்டு மானிய விலையை நிர்ணயிப்பதற்கு PUSCL, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுடன் ஆலோசனைகளை மேற்கொள்ளும்.

20. PUSCL ஆனது குறைந்த வருமானம் கொண்ட நுகர்வோருக்கு சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வாழ்க்கை மட்ட கட்டணங்கள் மற்றும் ஏனைய நுகரவுப் பிரிவினர் மின்சார செலவினங்களை ஈடுசெய்யும் வகையில், அவர்களுக்கு நிதியில் மானியம் மற்றும் குறுக்கு மானியம் (cross subsidy) போன்றன வழங்கப்படுவதோடு குறைந்த வருமானமான வகுப்பினருக்கு அவர்களால் ஈடுகொடுக்கும் வகையில் கட்டணங்கள் அறவிடப்படும் (சில கட்டண சுழற்சிகளில் படிப்படியாக குறுக்கு மானியம் அகற்றப்படும்).

21. குறைந்த வருமானம் கொண்ட வகுப்பினருக்கு ஒரு குறிப்பிட்ட நுகர்வோர் பிரிவினரால் வழங்கப்படும் குறுக்கு மானியமானது, ஆரம்ப செலவினங்களக்கான கட்டணங்களை பிரதிபலிக்கும் வகையில் பராமரிப்பதற்கு நுகர்வோர் பிரிவினரால் வழங்கப்படும் மானியம் மின்சார வழங்கல் செலவினங்களின் 15% தத்திற்கு வரையறுக்கப்படும்.

22. கட்டண முறைகளை ஒன்றிணைத்தல், வீட்டுத் துறை மற்றும் கைத்தொழற்துறைகளில் காணப்படும் கட்டண வேறுபாடுகளை நீக்குதல் மற்றும் பொது-நோக்கத்திற்கான கட்டணங்கள், தெளிவற்ற விடயங்களுடன் காணப்படும் நுகர்வோர் பிரிவினரை நீக்குதல் போன்ற விடயங்களை உள்ளடக்கி PUSCL ஆனது நுகர்வோருக்கு இலகுவான கட்டண முறைகளை வெளியிடல் வேண்டும். இதன் மூலம் 2025 ஆம் ஆண்டளவில் சர்வதேச ரீதியாக கடைப்பிக்கப்படும் மின்மானி நடைமுறைகள் மற்றும் விலையிடல்கள் ஊடாக இத் தொழிற்துறையில் சிறந்த

பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும். நுகர்வோருக்கான கட்டண சீர்திருத்த கட்டமைப்புக்களை அமுல்படுத்துவதனை PUSCL ஆனது உறுதிசெய்யும்.

23. வங்கிகள், நிதி நிறுவனங்கள், மூலதன முதலீட்டு நிறுவனங்கள் மற்றும் தொடர்மாடி விற்பனை நிறுவனங்கள் போன்ற வாத்தக நிறுவனங்களுக்கு எந்த வித மானியமும் வழங்கப்படமாட்டாது அத்துடன் குறைந்தபட்சம் மின்சாரம் வழங்குவதற்கு ஏற்படும் உண்மைச் செலவினம் அவர்களிடமிருந்து அறவிடப்படும்.

மானியம்

2.4. எதிர்காலத்தில் மின்சாரத் தொழிற்துறைக்கு அரசால் மானியம் வழங்கப்பட மாட்டாது. இருப்பினும், குறைந்த வருமானம் கொண்ட வகுப்பினருக்கும் மற்றும் தொழிற்துறை நுகர்வோருக்கு வசதியாக குறுக்கு-மானியக் கொள்கை பயன்பாடுகள் பின்பற்றலாம்.

25. விலைப் பட்டியால் மற்றும் மானியங்களை நிருவகிப்பதில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில், 2023 ஆம் ஆண்டு முதல் வாடிக்கையாளருக்கான வெளியிடப்பட்ட கட்டணத்தின் கீழான உண்மையான கட்டணம் மற்றும் நுகர்வோருக்கு வழங்கப்படும் மானியம் (அல்லது விதிக்கப்பட்ட கூடுதல் கட்டணம்) (அல்லது மின்னணு விலைப் பட்டியலுக்கு பதிலாக டிஜிட்டல் முறையிலான பயன்பாடுகள் தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.), போன்றவை விலைப் பட்டியலில் அச்சிடப்பட வேண்டும்.

26. ஹோட்டல் தொழிற்துறையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட வரிகளை ஈடுசெய்து, ஹோட்டல் தொழிற்துறைக்கான மானியங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆராயப்படும்.

2023 ஆம் ஆண்டின் 1வது அரையாண்டிற்கான இடைக்கால விலையிடல் கட்டண ஒதுக்கங்கள்

27. திருத்தப்பட்ட கொள்கை வழிகாட்டுதல்களுக்கு இணங்க, 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான விலை மற்றும் கட்டணங்கள் இணைப்பு - 03 இல் குறிப்பிட்டதன் படி , 2023 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

சந்தை மற்றும் விலையிடல் சீர்திருத்தங்கள்

28. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மின்சாரத் தொழிற்துறையில் சீர்திருத்தங்கள் மீதான அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் ஆரம்பிப்பதற்கு, உள்ளடக்கப்படும் விடயங்களாவன (i) விநியோகம் மற்றும் பரிமாற்ற அனுமதிப்பத்திரதாரர்கள் செயற்பாட்டு (wheeling) வசதிகளை வழங்குதல், (ii) சிறிய உற்பத்தியாளர்கள் விநியோகம் அல்லது பரிமாற்ற அனுமதிப்பத்திரதாரர்களுக்கு விற்பனைகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திறந்த அணுகல் வசதிகளை வழங்குதல், மற்றும் (iii) மின்சார வர்த்தகத்திற்கான சந்தையை நிறுவுதல்.

29. இவ் 2025 ஆம் அண்டிலிருந்து இவ் சீர்திருத்தமானது அனைத்து வகையான மானியங்களும் விலக்கப்படும். அத்துடன், மின்சாரத்திற்கான விலையிடல் மற்றும்

விலைப் பட்டியல் செயற்பாடுகளுக்கு புறம்பாக, நுகர்வோருக்கு நேரடியாக மானியங்கள் வழங்கப்படும்.

திருத்தங்கள் மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள்

30. மின்சாரத் தொழற்துறையில் அனுமதிப்பத்திரம் பெற்ற அனைத்து நிறுவனங்களினதும் நிதிச் சுதந்திரத்தை நிறுவும் வகையில், இலங்கை மின்சார சபையின் (CEB) அனைத்து செற்பாடுகள் 2024 மார்ச் 31 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்படும். இதனை பூர்த்திசெய்யும் வகையில், 2023 ஆம் ஆண்டிற்கான செலவினங்களையும் ஈடுசெய்யும் வகையில் அனுமதிப்பத்திரதாரர் நிறுவனத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளும் இதற்காக ஒதுக்கப்படும்.

31. தற்போதுள்ள விற்பனைகளுக்கான விலை பட்டியலிடல் முறைகள், பரிமாற்றல் செயற்பாடுகள் மற்று விநியோகச் பரிமாற்றல்கள், 2023 ஆம் ஆண்டிலிருந்து உண்மையான பரிமாற்றல் பரிவர்த்தனைகளாக மாற்றப்படும். குறித்த நுகர்வோருக்கு ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரர்களாலும் விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கும், இறுதி - பயன்பாட்டு நுகர்வோர் மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்கு தனித்தனியான கணக்குகளை பராமரித்தல் வேண்டும்.

32. 2023 ஆம் அண்டு தொடக்கம், ஒவ்வொரு சுயாதீன அனுமதிப்பத்திரதாரரும் தங்களின் ஒழுங்குமுறைக் கணக்குகள் மற்றும் தங்கள் நிதிக் கணக்குகளை வெளியிடல் வேண்டும், ஒவ்வொரு அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனத்தின் அதன் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கும் நிதியில் பொறுப்புக்களை ஒதுக்கல் வேண்டும்.